தூதன்

தூதன் 35 நவம்பர் 2026 தூது 10

கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார். லூக்கா 6:38




தென்னிந்தியத் திருச்சபை - தமிழ் சபை - துபாய்



Junior Church Retreat



Church Convention 2026



Youth Sunday Service

தென்னிந்தியத் திருச்சபை
தமிழ் சபை - துபாய்

சபை போதகர் மடல்	01
ஆயரம்மா மடல்	05
∴புஜைரா போதகர் மடல்	07
ஆயரம்மா மடல் - ∴புஜைரா	10
இராஸ் அல் கைமா - போதகர் மடல்	13
ஆயரம்மா மடல் - இராஸ் அல் கைமா	15
செயலர் மடல்	17
நீங்கள் கிறிஸ்தவரா!	21
திருச்சபை ஜெபநாள்	22
வேதவினா போட்டி	25
தெரிந்துகொள்வோம்	27
Health Tips	29
தமிழ் வேதவகுப்பு - சிறுவர் பகுதி	31
Children's Corner	35
Birthday Celebrants	40
Wedding Anniversary	44
Ahithopel	46

P.O.Box: 8785, Dubai. Mob: 050-5533645
Email: office@csitamilparishdubai.com - Website: www.csitamilparishdubai.com

சபை போதகர் மடல்

அன்பானவர்களே!

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் திருச்சபை மக்கள் யாவருக்கும் எனது அன்பான நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். சபை ஊழியங்களை நிறைவாக செய்துவரும் ∴புஜைரா, மற்றும் இராஸ் அல் கைமா போதகர்கள், நிர்வாகஸ்தர்கள் மற்றும் EC அங்கத்தினர்கள் அனைவரையும் அன்புடன் வாழ்த்துகிறேன். கடந்த மாதம் முழுவதும் ஆண்டவர் தந்த பாதுகாப்பிற்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன்.

கடந்த மாத ஊழியங்களை கர்த்தர் ஆசீர்வதித்து வழி நடத்தினார். அனைத்து ஆராதனைகள், Prayer Cell Ministries, Junior Church Ministries, Youth Fellowship, Cornerstone, Women's Fellowship, Men's Fellowship, Camp Ministries, மற்றும் தமிழ் வகுப்புகள் சிறப்பாக நடைபெற ஆண்டவர் உதவி செய்தார். Junior Church Retreat மற்றும் Youth Sunday சிறப்பாக நடைபெற்றது. வருடாந்திர கன்வென்ஷன் கூட்டங்கள் ஆசீர்வாதமாக அமைய ஆண்டவர் உதவி செய்தார். தேவ செய்தி வழங்கிய சகோ. சாம்சன்பால் அவர்களுக்கும் நன்றி கூறுகிறேன். வளர்ந்து வரும் Marriage Portal ஊழியங்களுக்காகவும் ஆண்டவரைத் துதிக்கிறேன். ஊழியங்களை உண்மையாய் செய்துவரும் Ministry Leaders அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்.

இவ்வருடத்தின் பதினோராவது மாதத்தைக் காண ஆண்டவர் அருளிய கிருபைகளுக்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம். இம்மாதத்தில் அனைத்து ஆராதனைகளையும் சபையின் ஊழியங்களையும் ஆண்டவர் ஆசீர்வதித்து வழி நடத்துவாராக. இராஸ் அல் கைமா திருச்சபையின் ஸ்தோத்திர பண்டிகை சிறப்பாக நடைபெற ஆண்டவர் உதவினார். துபாய் மற்றும் ∴புஜைரா திருச்சபைகளில் நடைபெறவுள்ள Harvest Festival ஆசீர்வாதமாக அமைய ஜெபம் செய்வோம். ஆண்டவர் இப்புதிய மாதம் நம் அனைவருக்கும் ஆசீர்வாதமாக அமைய கிருபை செய்வாராக. இம்மாதத்திற்கான வாக்குத்தத்த வசனத்தை தியானிப்போம்.

உன் கூடாரத்தின் இடத்தை விசாலமாக்கு,
உன் வாசஸ்தலங்களின் திரைகள் விரிவாகட்டும். ஏசாயா 54:2

Enlarge the place of your tent, stretch your tent curtains wide.
Isaiah 54:2

தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. அதில் பல Engineers, Doctors மற்றும் Businessmen பங்கு பெற்றிருந்தனர். நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் பல கேள்விகளைக் கேட்டார். அப்படி கேட்கும் போது முதலாவது Engineer ஒருவரிடம் BMW ஒன்று வாங்குவதற்கு உங்களுக்கு எவ்வளவு நாட்கள் ஆகும் என்று கேட்டார். அவர் நான் இரண்டு ஆண்டுகளில் வாங்கிவிடுவேன் என்று சொன்னார். அடுத்து, Doctor -ரிடம் கேட்டார். அவர் நான் ஒரு வருடத்தில் வாங்கிவிடுவேன் என்று சொன்னார். அடுத்து, அங்கு இருந்த பிரபல தொழிலதிபர் Ratan Tata அவர்களிடம் அதே கேள்வியைக் கேட்டார். அதற்கு அவர் யோசித்துவிட்டு ஐந்து ஆண்டுகளாவது ஆகும் என்று சொன்னார். எல்லாருக்கும் ஆச்சரியம். Engineer இரண்டு ஆண்டுகள் என்று சொல்கிறார். Doctor ஒரு ஆண்டு என்று சொல்கிறார். இவ்வளவு பெரிய பணக்காரர் ஐந்து ஆண்டுகள் ஆகும் என்று சொல்கிறாரே என்று ஆச்சரியப்பட்டார்கள். நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் மீண்டும் அவரிடம் நீங்கள் நினைத்தால் ஒரே நாளில் வாங்கிவிட முடியும். ஏன் ஐந்து ஆண்டுகள் என்று சொல்கிறீர்கள் என்று கேட்டார். அப்பொழுது Ratan Tata அவர்கள் BMW எவ்வளவு பெரிய company. அதை வாங்க வேண்டுமானால் குறைந்தது ஐந்து ஆண்டுகளாவது ஆகாதா? என்று கேட்டார். எல்லாரும் நினைத்தது BMW Car-ஐ. ஆனால் அவர் நினைத்தது BMW Company-யை.

ஆம். அன்பானவர்களே, உயர்ந்த எண்ணங்கள்தான் சிறந்த மனிதர்களை உருவாக்குகிறது. நம் எண்ணங்களும், எல்லைகளும் விரிவாக வேண்டும். அது நம்மை சிறப்பான நிலைமைக்கு அழைத்துச்செல்லும். அதையே ஆண்டவரும் இவ்வசனத்தின் மூலம் நமக்கு நினைப்பூட்டுகிறார். பாபிலோனிய சிறையிருப்பின் நாட்களில் நம்பிக்கை இழந்து வாழ்ந்து கொண்டிருந்த இஸ்ரவேலருக்கு ஏசாயா தீர்க்கதரிசியின் மூலமாக ஆண்டவர் வழங்கும் நம்பிக்கையின் வாக்குத்தத்தம் - "உன் கூடாரத்தின் இடத்தை விசாலமாக்கு, உன் வாசஸ்தலங்களின் திரைகள் விரிவாகட்டும். அப்பொழுது, நீ வலது புறத்திலும் இடதுபுறத்திலும் இடங்கொண்டு பெருகுவாய்" என்பது. இஸ்ரவேலருடைய நம்பிக்கையின் எல்லைகளை விரிவாக்க அழைப்பு தரும் ஆண்டவர், சிந்தனைகள் விரிவடையும் போது பெரிய காரியங்களை சாதிக்க அழைத்துச்செல்கிறார்.

நாம் நம்முடைய எல்லைகளை எவ்வாறு விரிவாக்கலாம் என்று தியானிக்கலாம்.

முதலாவது...

1. ஜெப எல்லைகள் விரிவாகட்டும்.

Enlarge Your Prayer Boundaries.

சங்கீதம் 81:10 ல் "உன் வாயை விரிவாய்த் திற, நான் அதை நிரப்புவேன்" என்று ஆண்டவர் சொல்கிறார். அதுபோல, 1 நாளாகமம் 4:10-ல் யாபேஸ் "தேவரீர் என்னை ஆசீர்வதித்து, என் எல்லையை பெரிதாக்கும் என்று ஜெபிக்கிறார்." அவன் வேண்டிக்கொண்டதைத் தேவன் அருளினார் என்று வாசிக்கிறோம். ஆதியாகமம் 18-ம் அதிகாரத்தில் ஆபிரகாம் சோதோம் கொமோரா பட்டணங்களுக்காக ஆண்டவரிடம் வேண்டுதல் செய்கிறார். அதில் வாழும் தன் உறவினராகிய லோத்துவுக்காக மட்டுமல்ல ஒட்டுமொத்த ஜனங்களுக்காகவும் வேண்டுதல் செய்கிறார். யோபு தன் சிநேகிதருக்காக ஜெபித்தபோது யோபுவுடைய சிறையிருப்பு மாறினது. நம்முடைய ஜெப எல்லைகள் நமக்காக, நம் பிள்ளைகளுக்காக, நம் குடும்பத்திற்காக என்று குறுகிய வட்டத்திற்குள் நின்றுவிடாமல் ஜெப எல்லைகள் விரிவாக வேண்டும் என்று ஆண்டவர் நமக்கு அழைப்பு தருகிறார்.

இரண்டாவது...

2. விசுவாசத்தின் எல்லைகள் விரிவாகட்டும்.

Enlarge Your Faith Boundaries.

லூக்கா 1:37 ல் "தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை" என்று வாசிக்கிறோம். யோசுவாவின் புஸ்தகம் மூன்றாவது அதிகாரத்தில் யோசுவாவின் தலைமையிலான இஸ்ரவேலர் யோர்தானின் கரையில் தங்கியிருக்கிறார்கள். யோசுவாவின் விசுவாசம் ஆண்டவர் மேல் இருந்தது. "ஆண்டவராகிய கர்த்தரின் பெட்டியைச் சுமக்கிற ஆசாரியர்களின் உள்ளங்கால்கள் யோர்தானின் தண்ணீரிலே பட்டமாத்திரத்தில், மேலேயிருந்து ஓடிவருகிற யோர்தானின் தண்ணீர் ஓடாமல் ஒரு குவியலாக நிற்கும்" என்று விசுவாசத்தோடு அறிவிக்கிறார். அது அப்படியே நடக்கிறது. நதி நிற்கும் என்பது இயல்பாக நினைத்துக்கூட பார்க்கமுடியாத காரியம். ஆனால், யோசுவாவின் விசுவாசம் எல்லை தாண்டிய விசுவாசமாயிருந்தது. அது ஜெயமாய் மாறியது. நம்முடைய வாழ்விலும் நாம் போராட்டங்களும், பெலவீனங்களும் வரும் போது சோர்ந்துவிடுகிறோம். அதைத் தாண்டி தேவன் செயல்பட முடியும் என நம்ப மறுக்கிறோம். ஆனால், எல்லைகளைத் தாண்டிட ஆண்டவரால் கூடும் என்ற விசுவாசம் அவசியம். அது நம்மை இன்னும் உயர்ந்திட நிச்சயம் உதவி செய்யும்.

மூன்றாவது...

3. அன்பின் எல்லைகள் விரிவாகட்டும். Enlarge Your Love Boundaries.

மத்தேயு 5:46,47-ல் ஆண்டவர் தமது மலைப்பிரசங்கத்தின் போது, "உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகிப்பீர்களானால் உங்களுக்குப் பலன் என்ன? உங்கள் சகோதரரைமாத்திரம் வாழ்த்துவீர்களானால் நீங்கள் விஷேசித்துச் செய்கிறது என்ன?" என்று கேட்கிறார். ஆண்டவர் மீது அன்பு செலுத்த வேண்டும், நம்மீது அன்பு செலுத்துவது போல பிறர் மீதும் அன்பு செலுத்த வேண்டும் என்ற போதனை பழைய ஏற்பாட்டிலிருந்தே நமக்கு வழங்கப்படும் கட்டளையாகும். ஆண்டவர் இயேசு கிறிஸ்து இந்த எல்லைகளை இன்னும் விரிவாக்குகிறார். பகைவர் மீதும் அன்பு செலுத்த வேண்டும் என்று கற்றுத்தருகிறார். கற்றுத்தருவதோடு நின்றுவிடாமல் தன்னை சிலுவையில் அறைந்தவர்களையும் மன்னித்து அன்பை வெளிப்படுத்துகிறார். லூக்கா 10-ம் அதிகாரத்தில் சமாரியன் ஒருவனின் நல்ல குணத்தைச் சுட்டிக்காட்டி அது போல் பாரபட்சம் இல்லாமல் அனைவர் மீதும் அன்ப செலுத்த அழைப்பு தருகிறார். நம் அன்பின் எல்லைகள் ஒருசிலரோடு நின்றுவிடுகிறது. நமக்கு வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என பிரித்துப் பார்க்கிறோம். ஆனால் கிறிஸ்துவின் அன்பு எல்லைகளைத் தாண்டியது. நாமும் அவ்விதமாகவே அன்பு கூற அழைக்கப்படுகிறோம்.

ஆம். அன்பானவர்களே, நம் எண்ணங்களும், எல்லைகளும் விரிவாகட்டும். நமக்காக மட்டுமல்ல அல்லது சுயநலத்தோடு அல்ல பிறருக்காகவும் ஜெபிக்க முழங்கால்களை முடக்குவோம். ஆண்டவர் மீதுள்ள நம்பிக்கையில் குறைந்திட வேண்டாம். சூழ்நிலைகளை கண்டு பயந்திடவும் வேண்டாம். நம்பிக்கையின் எல்லைகளும் விரிவாகட்டும். அனைவரையும் ஏற்றுக்கொள்ளவும், பாரபட்சமில்லாமல் அன்பு கூறவும் அர்ப்பணிப்போம். ஆண்டவர் நம்மை ஆசீர்வதிப்பார். ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்
அருட்திரு. K.சுதாகர்.
சபை போதகர்/தலைவர்.

நித்தியத்தில் நுழைந்தவர்கள்...

"கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்"

நமது சபை அங்கத்தினர்
Mr. Singh Ratnam அவர்களின் தகப்பனார்
Mr. A.T. Ratnam அவர்கள் 10-10-2026 அன்று
கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள்.

ஆயரம்மா மடல்

இறைவனிடம் நன்மை பெற்ற இல்லத்தரசிகள் - எஸ்தர்

வானில் இருள் சூழ்ந்து, வாழ்க்கையில் புயல் அடித்து, நம்பிக்கை இழந்து நிற்கும்போது உதிக்கும் ஒரு நட்சத்திரத்தின் ஒளி எவ்வளவு அழகாய் இருக்கும். அந்த நட்சத்திரத்தின் ஒளியும், வெப்பமும், அழகும் வாழ்வை மெருகூட்டி அலங்கரிக்குமல்லவா? இத்தகைய ஒரு அற்புதப் பணியை ஒளிமங்கி அஸ்தமனத்தை நோக்கிப் பயணம் செய்துகொண்டிருந்த இஸ்ரவேலரின் வாழ்விலும் செய்தாள் எஸ்தர் என்னும் இளமங்கை. அவள் இறைவனிடம் என்ன நன்மை பெற்றாள் என்று பார்ப்போம்.

எஸ்தர் என்றால் நட்சத்திரம் என்பது பொருள். இவளது இயற்பெயர் அத்சாள் (அர்த்தம்:-கொழுந்துச்செடி). பென்யமீன் கோத்திரத்தானான அபியாயேலின் குமாரத்தி. பெற்றோரை இழந்த இவள் தனது பெரியப்பா யாசீரின் குமாரன் மொர்தெகாயால் வளர்க்கப்பட்டாள். பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் எருசலேமின் குடிகளைச் சிறைப் பிடித்துக் கொண்டு போகும்போது எஸ்தரும், மொர்தெகாயும் கொண்டு போகப்பட்டார்கள். வஸ்திக்கு பிறகு ராஜாவால் தெரிந்தெடுக்கப்பட்டு ராணியாக முடிசூட்டப்பட்டவள்தான் எஸ்தர்.

1. உயர்வு பெற்றாள்:-

அகாஸ்வேரு இராஜாவுக்காகப் பல சௌந்தரியமுள்ள பல பெண்கள் 127 ராஜ்யங்களிலிருந்து கொண்டு வரப்பட்டு 6 மாதம் வெள்ளைப் போளத்தினாலும், 6 மாதம் சுகந்த வர்க்கத்தினாலும், மற்ற சுத்திகரிப்பினாலும் சுத்திகரிக்கப்பட்டு, ஜோடிக்கப்பட்டு ராஜாவிடம் முறைமுறையாக அனுப்பப்பட்டார்கள். அப்படிப் போகும்போது அவர்கள் என்னென்ன வேண்டுமென்று கேட்பார்களோ அவையெல்லாம் கொடுக்கப்படும். ஆனால் எஸ்தரோ, ஸ்திரீகளைக் காவல் பண்ணுகிற ராஜாவின் பிரதானியான யேகாப் நியமித்த காரியங்களைத் தவிர வேறொன்றையும் கேட்கவில்லை. அவளுக்கு விருப்பங்கள் பல இருந்திருக்கலாம். ஆனாலும் அவற்றை கட்டுப்படுத்த அறிந்திருந்தாள். தன் இருதயத்தை அடக்குகிறவள் புத்தியுள்ள பெண். இன்றும் அநேகப் பெண்கள் தேவனுக்காகப் பல காரியங்களைச் சாதிக்க விரும்பியும் அவர்களை எழும்ப விடாமல் பிடித்துத் தள்ளும் ஒரு சக்தி இந்த அடக்கமின்மையே அல்லது திருப்தியின்மையே. ஆனால் எஸ்தரோ தன்னுடைய இந்த சிறந்த குணத்தினால் அந்தத் தேசத்து அரசியாக பட்டம் சூட்டப்பட்டாள். அகாஸ்வேரு ராஜாவின் மனைவியாக உயர்வு பெற்றாள்.

2. உபவாசித்து ஜெபித்தாள்:-

மொர்தெகாய் பிரதான மந்திரியாகிய ஆமானை நமஸ்கரியாததைக் கண்டு கொதிந்தெழுந்த ஆமான், அவன் வம்சமாகிய யூதக் குலம் முழுவதையும் அழிக்கத் திட்டமிட்டான். சூசான் நகரம் கலங்கிற்று. மொர்தெகாய், எஸ்தர் இதைக் குறித்து ராஜாவிடம் போய் விண்ணப்பம் பண்ண வேண்டும் என்றான்.

நல்லெண்ணம் கொண்ட எஸ்தர் முதலில் ராஜாவிடம் போய் மன்றாட தயங்கினாள். யூதர்களை அழிக்க சூசானில் பிறந்த சட்டத்தை அரண்மணைக்குள்ளேயே வசித்த எஸ்தர் அறிந்திருக்கவில்லை. சூழ்நிலையை அவள் விசாரித்துத் தெரிந்து கொண்ட பிறகு அது அவளை மௌனமாயிருக்க விடவில்லை.

ஒரு குறிப்பிட்ட நாளில் யூதரெல்லாரும் கொலை செய்யப்பட வேண்டும் எனக் கட்டளையிடப்பட்டதால் தேசமெங்கிலுமுள்ள யூதர்கள் உபவாசம் பண்ணி மகா துக்கமும், அழுகையும், புலம்பலும் உண்டாகி அநேகர் இரட்டுடுத்தி சாம்பலில் கிடந்தார்கள். விவரமறிந்த எஸ்தர் இது மௌனமாயிருக்கும் காலமல்ல என உணர்ந்து எழும்பினாள். ராஜாவிடம் போய் தன் ஜனத்திற்காக விண்ணப்பித்தாள். "நீ ராஜ்யத்தின் பாதிமட்டும் கேட்டாலும் தருவேன்" என்று தன்னிடம் ராஜா வாக்குப்பண்ணின போது "என் வேண்டுதலுக்கு என் ஜீவனும் என் மன்றாட்டுக்கு என் ஜனங்களும் கொடுக்கப்படுவதாக" என்று வேண்டி உபவாசித்து ஜெபித்து ஜெயங்கொண்டாள்.

3. உயிர்களைக் காப்பாற்றினாள்:-

எஸ்தரும் யூத குலத்தைச் சேர்ந்தவளாகையால் மரிக்கும் வாய்ப்பு தன் பக்கமும் உண்டு என அறிந்தும் தனது ஜனங்களுங்காக வேண்டினாள். அவளது வசதிகள், சுக போகங்கள், அந்தஸ்துகள் இவற்றைவிட அடிமைகளைப் போல வாழ்ந்து கொண்டிருந்த அவள் ஜனத்தின் உயிரை அவள் பெரிதாய் நினைத்தாள். எஸ்தர் தன் ராஜமேன்மையை ராஜசமுகத்தில் யூதரின் இரட்சிப்புக்காய் பயன்படுத்தினாள். கலங்கின சூசான் நகரின் சூழ்நிலை மாறி ஆர்ப்பரித்து மகிழ்ந்தது. இப்போது கிடைத்த வெற்றி எப்போதும் அவர்களுக்கு நிலைத்து இருக்க வேண்டுமென்று எண்ணினாள் எஸ்தர். அதற்காக அவள் ராஜாவிடம் விண்ணப்பித்து, யூதரை கொலை செய்ய நினைத்தவர்களை கொலை செய்தாள். எஸ்தர் ஏன் இப்படி பழிவாங்கினாள் என நாம் நினைக்கத் தோன்றும். எல்லாம் தேவ தீர்மானத்தின்படி தேவ நியாயத் தீர்ப்பின்படி நடந்தது என்பது தான் உண்மை. யூத குல மக்களின் உயிர்களைக் காப்பாற்றுவதற்காக தன் உயிரையும் அர்ப்பணித்தாள். ராஜாவின் அழைப்பு இல்லாதிருந்த போதும் தன் குல மக்களைக் காப்பாற்றுவதற்காக அரசனிடம் தன் உயிரை பணயம் வைத்து சென்று உயிர்களைக் காப்பாற்றுவதில் வெற்றி பெற்றாள்.

தம்மை நம்புகிறவர்களுக்கு இறைவன் அருளும் நன்மைகள் ஏராளம். எஸ்தருடைய வாழ்விலும் ஆண்டவர் அவரை எளிய நிலையிலிருந்து உயர்த்தி ஆசீர்வதித்தார். தான் உயர்வு பெற்ற நிலையிலும் தன் மக்களுக்காக உபவாசித்து எஸ்தர் ஜெபித்தாள். ஜெபத்தைக் கேட்ட ஆண்டவர் யூத ஜனங்களின் உயிர்களை பாதுகாத்தார். நாமும் எஸ்தரைப் போன்று உபவாசித்து ஜெபிக்க அர்ப்பணிப்போம். நம்மையும் ஆண்டவர் உயர்த்தி ஆசீர்வதிப்பார். ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்
திருமதி. ஸ்மைலி சுதாகர்
ஆயரம்மா, துபாய்.

ஃபுஜைரா போதகர் மடல்

கற்போம் கிரேக்கம் - 20

கிரேக்க மொழியின் இருபதாம் எழுத்து

ὖ ψιλόν, Upsilon , ü'psē-lŏn' Y- ʊ,

வார்த்தை : **ὑπακοή** - hypakoē - கீழ்ப்படிதல்

“வசனத்தைக் கேட்கிறவர்களாக மட்டுமல்ல, அதன்படி செய்கிறவர்களாகவும் இருங்கள்.” - யாக்கோபு 1:22

“கீழ்ப்படிதல்” என்றதும், “சொன்னதைச் செய்தே ஆக வேண்டும்” என்ற கட்டாயமே பலருக்குத் தோன்றும். ஆனால் வேதத்தில் இது இதைவிட ஆழமானது. புதிய ஏற்பாட்டின் கிரேக்க மொழியில் கீழ்ப்படிதலுக்கு **ὑπακοή** (hypakoē - ஹுபகோஏ) என்று பெயர். எளிதாகச் சொன்னால் இதன் பொருள்: “கேட்பது, கேட்டதற்குப் பதிலளிப்பது.”

1. இந்தச் சொல் என்ன சொல்கிறது?

இது இரண்டு சிறிய சொற்களால் ஆனது: **ὑπό** (ஹுபோ) - “கீழே” **ἀκούω** (அகூவோ) - “கேட்பது”. ஆகவே இது, தாழ்மையோடு செவிகொடுத்து, கேட்டதற்கு இணங்கத் தயாராக இருப்பவரின் படம். அப்போஸ்தலர் 12:13ல், கதவு தட்டப்படுவதைக் கேட்ட ரோதை என்ற இளம்பெண் “பதில் சொல்ல” வந்தாள், அங்கே இதன் வினை வடிவமே பயன்படுகிறது.

எதிர்ச்சொல் παρακοή (பரகோஏ) - “கேட்டும் கேளாதவர்போல் இருப்பது”: காதுகள் கேட்கின்றன உள்ளமோ அசைவதில்லை. எபிரெய மொழியிலும் “கேட்பது”, “கீழ்ப்படிவது” இரண்டுக்கும் שָׁמַע (ஷமா) என்ற ஒரே சொல்தான். எடுத்துக்காட்டாக, மருத்துவர், “தினமும் இந்த மாத்திரையைச் சாப்பிடுங்கள்” என்கிறார். கேட்பதோடு நிற்காமல் சாப்பிடுவதே கீழ்ப்படிதல். அவர் நம் நன்மையையே விரும்புகிறார் என்று நம்புவதால்தான் அப்படிச் செய்கிறோம். வேதம் சொல்லும் கீழ்ப்படிதலும் இதுவே.

கேட்பது --> நம்புவது --> செய்வது

2. வேதம் சொல்லும் நான்கு உண்மைகள்

அ) நம் இரட்சிப்பு இயேசுவின் கீழ்ப்படிதலில் நிற்கிறது

ஆதாம் தேவனுடைய கட்டளையைக் கேட்டும் புறக்கணித்தான் பாவமும் மரணமும் எல்லோருக்கும் வந்தன. இயேசுவோ பிதாவின் குரலுக்குச் செவிகொடுத்து, "மரணம் வரைக்கும், அதுவும் சிலுவை மரணம் வரைக்கும்" கீழ்ப்படிந்தார் (ரோமர் 5:19, பிலிப்பியர் 2:8). அவருடைய கீழ்ப்படிதலினாலேயே நாம் தேவனுக்கு முன் நீதிமான்களாக ஏற்றுக்கொள்ளப்படுகிறோம். எபிரெயர் 5:8-இன்படி, எப்போதும் கீழ்ப்படிந்தவரான அவர் "பாடுகளினால் கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டார்" அதாவது அதன் விலையை நேரில் அறிந்தார்.

ஆ) விசுவாசமும் கீழ்ப்படிதலும் இணைந்தே செல்கின்றன

"விசுவாசத்தினால் உண்டாகும் கீழ்ப்படிதல்" (ரோமர் 1:5) என்பதே தன் ஊழியத்தின் நோக்கம் என்றார் பவுல். விசுவாசம் என்பது தேவனை நம்புவது, அந்த நம்பிக்கைக்குக் கால்கள் முளைத்து நடப்பதே கீழ்ப்படிதல்.

இ) இரட்சிப்பைப் பெறுவதற்கு அல்ல, பெற்றதால் கீழ்ப்படிகிறோம்

நாம் கிருபையினாலே, விசுவாசத்தினாலே இரட்சிக்கப்பட்டோம் நற்கிரியைகளைச் செய்வதற்கென்றே தேவன் நம்மை உருவாக்கினார் (எபேசியர் 2:8-10). "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கட்டளைகளைக் கைக்கொள்வீர்கள்" என்றார் இயேசு (யோவான் 14:15). முதலில் அன்பு, அதன்பின் கீழ்ப்படிதல். கீழ்ப்படிதல் இரட்சிப்பின் விலை அல்ல, நாம் பெற்ற அன்புக்கு நாம் தரும் பதில்.

ஈ) கீழ்ப்படிதல் அடிமைத்தனம் அல்ல, குடும்ப உறவு

பேதுரு விசுவாசிகளைக் "கீழ்ப்படிதலுள்ள பிள்ளைகள்" என்று அழைக்கிறார் (1 பேதுரு 1:14). அன்புள்ள தகப்பனின் குரலுக்குப் பிள்ளை ஓடிவருவது பயத்தினால் அல்ல, தான் நேசிக்கப்படுகிறோம் என்ற நிச்சயத்தினால்.

3. அன்றாட வாழ்வில் கீழ்ப்படிதல்

- முதலில் செவிகொடுங்கள். வேதம் வாசிப்பது, ஜெபிப்பது, ஆராதனையில் திறந்த மனதோடு கேட்பது - கீழ்ப்படிதல் இங்கிருந்தே தொடங்குகிறது.

- ✶ உடனே, முழுமையாகச் செய்யுங்கள். "பிறகு செய்கிறேன்" என்று தள்ளிப்போடுவதும், பாதி மட்டும் செய்வதும் கண்ணுக்குத் தெரியாத கீழ்ப்படியாமையே. "பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலே சிறந்தது" (1 சாமுவேல் 15:22).

- ✶ சாதாரண இடங்களிலிருந்து தொடங்குங்கள். வேலையிடத்தில் நேர்மை, வீட்டில் மன்னிப்பு, காணிக்கையில் உண்மை, இனிய வார்த்தைகள், தூய எண்ணங்கள் (2 கொரிந்தியர் 10:5).

- ✶ தேவனுக்கே முதலில் கீழ்ப்படியுங்கள். பெற்றோர், வேலை தருபவர், அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிவது நல்லதே, ஆனால் "மனிதருக்குக் கீழ்ப்படிவதைவிடத் தேவனுக்குக் கீழ்ப்படிவதே நியாயம்" (அப்போஸ்தலர் 5:29).

- ✶ தவறினால் திரும்பி வாருங்கள். கீழ்ப்படிதல் நாள்தோறும் நடக்கும் பயணம் அறிக்கையிட்டால் தேவன் நம்மை மன்னித்துச் சுத்திகரிக்கிறார் (1 யோவான் 1:9).

ὑπακοή என்ற ஒரே சொல்லுக்குள் கீழ்ப்படிதலின் முழுப் படமும் அடங்கியிருக்கிறது. **ὑπό** ("கீழே") என்பது தேவனுக்கு முன் தாழ்ந்து நிற்கும் மனம் **ἀκούω** ("கேட்பது") என்பது அவர் குரலுக்குத் திறந்திருக்கும் செவி. இவ்விரண்டும் இணையும்போது உண்டாகும், கேட்டதற்குப் பதிலளிக்கும் வாழ்க்கையே **ὑπακοή**.

இந்தக் கீழ்ப்படிதலை முழுமையாக வாழ்ந்து காட்டியவர் இயேசு. அவர் பிதாவின் குரலுக்குச் செவிகொடுத்துச் சிலுவை வரை கீழ்ப்படிந்ததால், நாம் நீதிமான்களாக ஏற்றுக்கொள்ளப்படுகிறோம். இவ்வளவு அன்பைப் பெற்ற நாம், "செய்தே ஆக வேண்டும்" என்ற கட்டாயத்தினால் அல்ல, தகப்பனின் குரலுக்கு ஓடிவரும் பிள்ளைகளைப்போல மனமுவந்து கீழ்ப்படிகிறோம். கேட்டும் கேளாதவர்போல் இருப்பது παρακοή கேட்டு, நம்பிச் செய்வதே **ὑπακοή** இதையே இயேசு இப்படிச் சொன்னார்:

வசனம் : "என் வார்த்தைகளைக் கேட்டு, அவற்றின்படி செய்கிறவன்" புயலிலும் நிற்கும் வீட்டைக் கட்டியவன் (மத்தேயு 7:24-25).

கிறிஸ்துவின் சேவையில்
அருட்திரு. ராஜ் குமார் ஜான் வெஸ்லி
ஆயர், தமிழ் திருச்சபை, ∴புஜைரா

ஆயரம்மா மடல்

வேதத்தில் பெண்கள்-20

திறன்மிக்க பராமரிப்பால் ராஜ்யம் கட்டும் பெண்கள்

“பராமரிப்பு என்பது இரக்கம் மட்டுமல்ல; திறமையும், துணிவும், ஞானமும் நிறைந்த ஊழியம்.”

வேதாகமத்தில் பராமரிப்பு என்பது உணர்ச்சி மட்டுமல்ல, அதில் நடைமுறை ஞானமும், தொழில்திறனும், தாராளமும், துணிவான முடிவுகளும் அடங்கியுள்ளன. இத்திறன்களால் பெண்கள் கர்த்தருடைய ராஜ்யத்தைக் கட்டினார்கள் ஜீவன் காக்கப்படும், பலவீனர் தாங்கப்படும் இடமெல்லாம் அது கட்டப்படுகிறது.

பழைய ஏற்பாடு - ஜீவனுக்கும் நீதிக்கும் கருவியான திறன்

1. சிப்பிராள், பூவாள் - ஜீவனைக் காக்கும் திறன் யாத்திராகமம் 1:15-21
பார்வோனின் கொலைக்கட்டளையை மருத்துவச்சிகள் மறுத்தார்கள். தங்கள் நிபுணத்துவம் மரணத்தின் கருவியாக மாற இடங் கொடுக்கவில்லை. **திறன்மிக்க பணி தார்மீகப் பொறுப்பைச் சுமக்கிறது; தவறானதை மறுக்கும் துணிவும் பராமரிப்பே.** கர்த்தர் அவர்களுக்கு “வீடுகளை உண்டாக்கினார்” (எபிரெய மூலம்).
“மருத்துவச்சிகளோ, தேவனுக்குப் பயந்ததினால், ... ஆண்பிள்ளைகளையும் உயிரோடே காப்பாற்றினார்கள்.” - யாத்திராகமம் 1:17

2. அபிகாயில் - பேச்சுவார்த்தையில் ஞானத் தலைமை 1 சாமுவேல் 25:18-35
நாபால் தாவீதை நிந்தித்து வீட்டை அழிவுக்குள்ளாக்கியபோது, அபிகாயில் உணவுப்பொருட்களோடு தாவீதை எதிர்கொண்டு, விவேகத்தோடு பேசி இரத்தம் சிந்துதலைத் தடுத்தாள். **வன்முறையைத் தடுத்து ஒப்புரவாக்கும் ஞானமே, பதவியின்றியும், ஆவிக்குரிய தலைமை;** அவளுடைய துணிவு பாதுகாப்பற்ற சூழலைச் சகிக்கும் கட்டளை அல்ல.
“அந்த ஸ்திரீ மகா புத்திசாலியும் ரூபவதியுமாயிருந்தாள்” - 1 சாமுவேல் 25:3

3. சூனேமியாள் - உபசரிப்பிலும் திட்டமிடலிலும் திறன் 2 இராஜாக்கள் 4:8-37
எலிசாவுக்காக ஓர் அறைவீட்டைத் திட்டமிட்டுக் கட்டுவித்தாள் மகன் மரித்தபோதும் விரக்தியில் மூழ்காமல், “சுகந்தான்” (ஷாலோம்) என்று உதவி தேடிப்போனாள். **உபசரிப்பு என்பது வளங்களை ஒழுங்குபடுத்தும் ஞானமும், நெருக்கடியில் செயல்படும் உறுதியுமாகும்.** இத்தகைய திரைமறைவுப் பணியைச் சபை அங்கீகரித்துப் பகிரவேண்டும்.
“நாம் மெத்தையின்மேல் ஒரு சிறிய அறைவீட்டைக் கட்டி” - 2 இராஜாக்கள் 4:10

4. தபீத்தாள் (தொற்காள்) - கைவினையில் இரக்கம்

அப்போஸ்தலருடைய நடபடிகள் 9:36-42

விதவைகளுக்காக அவள் செய்த அங்கிகளும் வஸ்திரங்களும் அவளுடைய ஊழியத்தின் தொட்டுணரக்கூடிய சான்றாயின (9:39). **சாதாரணத் திறமையும் பிறர் தேவைக்குத் திருப்பப்படும்போது இரக்கத்தின் கருவியாகிறது;** உதவி பெறுவோரின் மாண்பை மதிக்க இது சபையை அழைக்கிறது.

"அவள் நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்துகொண்டுவந்தாள்" - அப்போஸ்தலருடைய நடபடிகள் 9:36

5. லீதியாள் - தொழில்முனைவிலும் உபசரிப்பிலும் திறன்

அப்போஸ்தலருடைய நடபடிகள் 16:11-15, 40

இரத்தாம்பர வியாபாரியான லீதியாள் ஞானஸ்நானம் பெற்றபின் தன் வீட்டை ஊழியர்களுக்குத் திறந்தாள் அது பிலிப்பிய விசுவாசிகள் கூடும் இடமாயிற்று (16:40). **வணிகமும் நிதிப்பொறுப்பும் உபசரிப்பும் விசுவாசத்தோடு இணையும்போது சமூகம் தழைக்கிறது;** நிதியளிப்பதாலேயே பெண்கள் விசுவாசத்தை நிரூபிக்கவேண்டியதில்லை.

"பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்தைத் திறந்தருளினார்." - அப்போஸ்தலருடைய நடபடிகள் 16:14

6. பெபேயாள் - சேவையிலும் தலைமையிலும் திறன் ரோமர் 16:1-2

பவுல் அவளைக் கெங்கிரேயா சபையின் "டயகோனோஸ்" (ஊழியக்காரி) என்றும், தனக்கும் அநேகருக்கும் "புரோஸ்டாடிஸ்" (புரவலர்) என்றும் சிபாரிசு செய்கிறான். **சேவை செய்கிறவர்களுக்கும் பராமரிப்பு தேவை:** அவளை ஏற்று உதவும்படி ரோமாபுரி சபையைக் கேட்கிறான் நன்றியோடு நில்லாமல் அவர்களின் அதிகாரத்தையும் தேவைகளையும் கவனிக்கவேண்டும்.

"அவள் அநேகருக்கும் எனக்குங்கூட ஆதரவாயிருந்தவள்" - ரோமர் 16:2

பொதுவான இழையும் சபையின் அழைப்பும்

ஏழு பெண்களிலும் நான்கு உண்மைகள்: **பராமரிப்புக்குத் தேர்ச்சி தேவை, திறன்மிக்க பணி மனித செழிப்புக்குப் பணிசெய்கிறது; பராமரிப்பு தியாகம் மட்டுமல்ல, செயலாற்றும் ஆற்றலும் பராமரிப்பவர்களுக்குச் சமூகம் பொறுப்புடையது.** "கட்டுதல்" என்ற இழையும் ஓடுகிறது: ஞானமுள்ள பெண் தன் வீட்டைக் கட்டுகிறாள் (நீதிமொழிகள் 14:1).

சபைகள் செய்யவேண்டியது: வரங்களை வளர்த்தல், கண்ணுக்குத் தெரியாத உழைப்பை அங்கீகரித்தல், தேவைகளைச் சுற்றி ஊழியம் கட்டுதல், பொறுப்பைப் பகிர்தல், பெண்களை முடிவெடுப்பவர்களாக மதித்தல், பராமரிப்பவர்களையும் பராமரித்தல்.

வரங்கள் வளர்க்கப்படும், திறன்கள் பகிரப்படும், மாண்பு காக்கப்படும், மனிதர் செழிக்கும் இடமெல்லாம் ராஜ்யம் கட்டப்படுகிறது. பணியைக் கொண்டாடுவதோடு, திறன்கள் அங்கீகரிக்கப்படும், சுமைகள் பகிரப்படும் சமூகங்களை உருவாக்குவதே சபையின் அழைப்பு.

"பராமரிப்பு திறமையால் அறிவூட்டப்பட்டு, நீதியால் வழிநடத்தப்பட்டு, விசுவாசத்தால் தாங்கப்படும்போது, சாதாரணப் பணி கர்த்தருடைய நோக்கங்களில் அசாதாரண ஊழியமாகிறது."

கிறிஸ்துவின் சேவையில்
திருமதி பாலின் எமிமா
ஆயரம்மா, தமிழ் திருச்சபை, ∴புஜைரா

திருமறைப் பாட ஒழுங்குகள் - நவம்பர் 2026

நாள்	தியானப் பொருள்	பழைய ஏற்பாடு	நிருப வாக்கியம்	நற்செய்தி பகுதி	சங்கீதம்
01-11-2026	சகல பரிசுத்தவான்களின் திருநாள்	எரேமியா 31:31-34	வெளிப். 7:9-17	மத்தேயு 5:1-12	150
01-11-2026	ஞாயிறு பள்ளி ஞாயிறு நீங்கள் விசேஷித்தவர்கள்	தானியேல் 3:20-25	பிலிப்பியர் 2:14-16	மத்தேயு 5:13-16	119:105-112
08-11-2026	கிறிஸ்துவில் ஒன்றுபடுதல்	ஏசாயா 2:1-4	2 கொரிந். 13:5-13	மத்தேயு 18:18-20	133
1511-2026	பெண் குழந்தைகளின் எதிர்காலம்	எண்ணா. 27:1-7	அப்போ. 16:13-15	மாற்கு 5:35-43	8
22-11-2026	அறுப்பின் பண்டிகை	உபாகமம் 24:19-22	2 கொரிந். 9:6-15	லூக்கா 12:22-31	65
22-11-2026	சகிப்புத் தன்மையற்ற உலகில் சமாதானத்துடன் வாழ்தல்	தானியேல் 6:1-5	கொலோ. 3:12-17	லூக்கா 9:51-56	120
29-11-2026	நம்பிக்கையுடன் வருகையை எதிர்நோக்குதல்	எரேமியா 33:10-16	1 தெச. 3:6-13	லூக்கா 1:39-45	68:11-20

இராஸ் அல் கைமா போதகர் மடல்

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் இராஸ் அல் கைமா திருச்சபையின் சார்பாக அன்பின் வாழ்த்துக்களை கூறிக் கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். ஆண்டவர் இயேசு கிறிஸ்துதாமே இப்புதிய மாதத்திலும் நம்மனைவரையும் பாதுகாத்து வழிநடத்துவாராக. பொதுவாக நவம்பர் மாதம் என்றால் நம் நினைவுக்கு வருவது குழந்தைகள் தினம் தான். ஆம், திருச்சபையும் நமது சபையிலுள்ள குழந்தைகளை அங்கீகரிக்கும் விதமாக நவம்பர் மாத முதல் வாரத்தை அகில உலக ஞாயிறு பள்ளி தினமாக (World Sunday School Day) கொண்டாடுகிறது. அதன் அடிப்படையில் கர்த்தர் நமக்குத் தந்திருக்கிற குழந்தைகளுக்கு ஆண்டவரை அறிந்து கொள்ள எப்படி நாம் உதவியாயிருக்க வேண்டும் என்பதை அறிந்து கொள்ள தேவனாகிய கர்த்தர் நமக்கு உதவி செய்வாராக.

"பின்வரும் சந்ததியான பிள்ளைகளுக்கு நாங்கள் அவைகளை மறைக்காமல், கர்த்தரின் துதிகளையும் அவருடைய பலத்தையும், அவர் செய்த அவருடைய அதிசயங்களையும் விவரிப்போம்." சங்கீதம் 78:4.

ஆபிரகாம் லிங்கன், "ஒரு குழந்தைக்கு நீங்கள் என்ன கற்பிக்கிறீர்களோ, அதுதான் அடுத்தடுத்த தலைமுறைகளின் எதிர்காலத்தை தீர்மானிக்கிறது" என்றார். மேற்சொன்ன வசனம் திருச்சபையின் ஞாயிறு பள்ளிகளின் முக்கியமான நோக்கத்தையும், பெற்றோர் மற்றும் திருச்சபையின் மாபெரும் பொறுப்பையும் நினைவு படுத்துகிறது.

கர்த்தர் நமக்கு சுதந்தரமாக தந்திருக்கும் குழந்தைகளுக்கு உலகக்கல்வி, செல்வம், அந்தஸ்து ஆகியவற்றை சேர்ப்பதில் காட்டும் ஆர்வத்தையும், அக்கறையையும் நாம் தேவனுடைய வார்த்தைகளையும், அவரைப்பற்றி கற்றுக் கொடுப்பதிலும் காட்டுவதில்லை. சங்கீதம் 78:4-ம் வசனத்தில், வருங்கால திருச்சபையின் சந்ததிகளான நமது குழந்தைகளுக்கு என்ன கற்றுக் கொடுக்க வேண்டும் என்பதை தெளிவுபடுத்துகிறது.

1. கர்த்தரின் துதிகளை விவரித்தல் :-

விவரித்தல் என்பது ஒரு காரியத்தையோ அல்லது நடந்தவற்றையோ தெளிவுபடுத்துதல் என்பதாகும். இன்றைய சமூகத்தில் வாழும் குழந்தைகள் தங்களுக்குப் பிடித்தமான நபர்களை அதாவது Media-வை சார்ந்தவர்களையோ, Sports-ஐ சார்ந்தவர்களையோ, எப்பொழுதும் பேசிக்கொள்ளுகிறவர்களாகவும், அவர்களைத் தங்களுடைய மாதிரிகளாகவும் ஏற்றுக்கொண்டு கிறிஸ்தவ பண்புகளையும், பக்தியையும் மறந்து போகிறவர்களாக மட்டுமல்ல, அவரைத் துதிக்குந் துதியை மறந்து வருகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் நமது குழந்தைகளுக்கு தேவன் ஒருவர் மாத்திரம் துதிக்குப் பாத்திரர் என்பதை மத்தேயு 21:16-ன் படி விவரித்துச் சொல்லி நமது குழந்தைகளை வளர்க்க வேண்டும்.

2. கர்த்தருடைய வல்லமையை விவரிக்க வேண்டும் :-

இன்றைய காலக்கட்டத்தில் தமது குழந்தைகள் வாழ்க்கையில் ஏற்படும் சின்ன சின்ன பிரச்சனைகளைக் கண்டு மனம் பதறுகிறவர்களாகவும், அதை எதிர்கொள்ள இயலாதவர்களுமாய் உள்ளனர். வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சனைகளையும், எதிர்மறையான சூழ்நிலைகளையும் எதிர்கொள்ள தேவனாகிய கர்த்தர் எப்படிப்பட்ட சூழ்நிலையில் இஸ்ரவேல் ஜனங்களை தெரிந்தெடுத்தார் என்பதையும், எதிரிகளால் ஏற்பட்ட பிரச்சனைகள், பாடுகள், உபத்திரவங்கள், அடிமைத்தனம் போன்றவற்றிலிருந்து தேவனாகிய கர்த்தருடைய வல்லமை எப்படி வெளிப்பட்டு அவர்களை வழிநடத்தியது என்பதை தெளிவாகச் சொல்லும் இந்த சங்கீதத்தில் கூறப்படும் வசனங்களைத் தெளிவாக நமது சந்ததிகளான குழந்தைகளுக்கு கற்றுக்கொடுக்கவேண்டும். இதைக் கற்றுக் கொடுக்கும்போது நமது பிள்ளைகள் எந்தச் சூழ்நிலையிலும் விசுவாச சந்ததியாக வளருவார்கள்.

3. அவருடைய ஆச்சரியமான கிரியைகளை விவரிக்க வேண்டும் :-

நிறைவாக தேவனுடைய ஆச்சரியமான அற்புத அடையாளங்களான அவருடைய கிரியைகளை நமது சந்ததிகளுக்கு விவரிக்க வேண்டும். இஸ்ரவேல் ஜனங்களின் கானான் பயணத்தின் போது ஏற்பட்ட அசாதாரணமான சூழ்நிலைகளில் தேவனுடைய ஆச்சரியமான கிரியைகள் வெளிப்பட்டது. மேகம், அக்கினி ஸ்தம்பங்களை ஏற்படுத்தியும், செங்கடலை இரண்டாகப் பிளந்து அவர்களைப் பாதுகாக்கிறவராகவும், வனாந்தர பயணத்தின்போது தண்ணீர், உணவு, இறைச்சி ஆகியவைகளை கொடுத்து தேவைகளைச் சந்திக்கிறவராகவும், தேவனுடைய ஆச்சரியமான கிரியைகள் வெளிப்பட்டது. இப்படிப்பட்ட தேவனுடைய மகத்துவங்களை நமது குழந்தைகளுக்கு உபாகமம் 6:7-ல் சொல்லப்பட்டுள்ளபடி பிள்ளைகளின் அன்றாட நேரங்களில் கற்றுக்கொடுக்கவேண்டும். இப்படிப்பட்ட செயல்களை நாம் கற்றுக்கொடுக்கும்போது நமது குழந்தைகள் தேவனைச் சார்ந்து வாழ்வதிலும், அவரை விசுவாசித்து வளருவதிலும், சாட்சியாக வாழ்வதிலும் நிலைத்திருக்க உதவி செய்யும்.

அன்பானவர்களே! ஞாயிறு பள்ளி என்பது வெறும் ஒரு மணி நேரம் வகுப்பு அல்ல. அது ஒரு தலைமுறையை உருவாக்கும் பயிற்சி பாசறையாகும். இதை நாம் திருச்சபை என்னும் குழுவாக இணைந்து தேவன் ஒருவரே துதிக்குப் பாத்திரர் என்பதையும், அவருடைய வல்லமையான செயல்களையும், அவருடைய ஆராய்ந்து முடியாத கிரியைகளையும் நமது சந்ததிகளுக்கு விவரித்துச் சொல்லி கிறிஸ்துவின் நாமத்தை பரந்து விரியச் செய்வோம். அதன் ஆசீர்வாதங்களை ஆண்டவர் நமது திருச்சபைக்கும், குடும்பங்களுக்கும் தந்து வழிநடத்துவாராக.

கிறிஸ்துவின் பணியில்
அருட்திரு. D.ஜோசப்
ஆயர், இராஸ் அல் கைமா.

ஆயரம்மா மடல்

அப்போஸ்தலருடைய நடபடிகளில் பெண்கள் - ரோதை

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவரையும் வாழ்த்துவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். கடந்த மாதம் முழுவதும் நம்மைப் பாதுகாத்த தேவாதி தேவனுக்கு நன்றி செலுத்தி புதிய மாதத்தின் ஆசீர்வாதத்திற்காக கர்த்தரிடம் ஜெபிப்போம். அவர் நம்மை நிறைவாய் வழிநடத்துவாராக. அப்போஸ்தலருடைய நடபடிகளில் பெண்கள் என்ற தலைப்பில் எழுதப்பட்டுவரும் கட்டுரைகளில் பல பெண் விசுவாசிகளின் ஆவிக்குரிய வாழ்விலிருந்து பல சத்தியங்களை அறிந்து வருகிறோம். இம்மாதத்திலும் அந்த வரிசையில் ரோதை (Rhoda) என்னும் இளம் விசுவாசியின் வாழ்விலிருந்து சத்தியங்களை அறிந்து கொள்ள கர்த்தர் உதவி செய்வாராக.

ரோதை (Rhoda) (அப்போஸ்தலர் 12:12-16)

வேதாகமத்தில் ரோதை (Rhoda) என்பவர் அப்போஸ்தலர் நடபடிகள் 12-ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு விசுவாசமுள்ள இளம்பெண் ஆவார். இவர் மாற்கு என்னும் பேர் கொண்ட யோவானுடைய தாயாகிய மரியாளின் வீட்டு பணிப்பெண்ணாக இருந்தார். இவரது வாழ்க்கையைக் குறித்து மிகக் குறுகிய வசனக் குறிப்புகள் மட்டுமே வேதாகமத்தில் கொடுக்கப்பட்டிருந்தாலும் ஆரம்பகால திருச்சபையின் வரலாற்றில் இவரது பங்களிப்பின் மூலமாக சிறந்த விசுவாச வாழ்க்கைப் பாடங்களை நமக்குக் கற்றுத் தருகிறார்.

1 சந்தேகமில்லாத விசுவாசத்தை வெளிப்படுத்துதல் :-

மரியாளின் வீட்டில் கூடியிருந்த அன்றைய சபைத் தலைவர்கள், பெரியவர்கள் என அனைவரும் பேதுருவின் விடுதலைக்காக ஒன்று கூடி ஜெபித்துக் கொண்டிருந்தனர். இவர்களது ஜெபத்தால் பேதுரு சிறைச்சாலையிலிருந்து விடுதலையடைந்து, யோவானுடைய வீட்டின் கதவண்டையில் வந்து நின்று கதவைத் தட்டும்பொழுது மற்றவர்களால் அது பேதுரு என்று நம்ப முடியவில்லை. ஆனால் ரோதை தான் கேட்ட குரலை நம்பினாள். தேவனாகிய கர்த்தர் ஜெபத்திற்கு பதில் தந்து விட்டார் என விசுவாசித்து தனது சந்தேகமில்லா விசுவாசத்தை வெளிப்படுத்தினாள். இதுபோல நாம் ஜெபிக்கும் எல்லா ஜெபத்திற்கும் தேவன் அற்புதங்களைச் செய்ய வல்லவர் என்பதை விசுவாசிக்க வேண்டும்.

2. தேவனுடைய ராஜ்ஜியத்தில் சிறியவர் பெரியவர் இல்லை :-

ரோதை அன்றைய சூழ்நிலையில் ஒரு கிறிஸ்தவ பின்னணியத்தில் இருந்தாலும் யோவானுடைய குடும்பத்தில் பணிப்பெண்ணாக வேலை செய்து கொண்டிருந்தாள். ஆனாலும் அவள் வாழ்ந்த காலத்தில் அனைவரும் ஒன்று கூடி ஜெபித்து கிறிஸ்தவ பண்புகளை வெளிப்படுத்தி வந்தனர். பேதுருவுக்காக ஜெபித்துக் கொண்டிருந்த வேளையில் கதவருகே சென்று கதவைத் தட்டிக் கூப்பிடுகிறவர் பேதுரு என்று மற்றவர்களிடம் சென்று சொன்னபோது அவர்கள் இவளைப் பைத்தியம் என்றனர். ஆனால் அவள் வெளியில் நிற்பது பேதுருதான் என்பதில் உறுதியாயிருந்தார். இதன் மூலம் தேவன் தனுடைய ராஜ்ஜியத்துக்குரியவைகளில் சிறியவர், பெரியவர், உயர்ந்தோர், தாழ்ந்தோர் எனப் பார்க்காமல் அனைவரையும் ஏற்றுக் கொள்கிறவராகவும், அனைவரையும் பயன்படுத்துகிறவராயும் இருக்கிறார் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

3. நற்செய்தியை மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்ளுதல் :-

யூதர்களுக்கும், ரோமர்களுக்கும் பயந்து வீட்டைப் பூட்டிக் கொண்டு ஜெபித்துக் கொண்டிருந்த நிலையில் ரோதை மட்டும் கதவு தட்டப்படுகிறதை அறிந்து அது பேதுரு என்று அறிந்தவுடன், நடந்து கொண்டிருந்த சூழ்நிலையில் கதவைக் கூடத் திறக்காமல் மகிழ்ச்சியோடு வந்திருப்பது பேதுரு என்பதை அறிவிக்கச் சென்றாள். பழைய ஏற்பாட்டில் பஞ்சத்தோடு இருந்த சமாரியா தேசம் பாதுகாக்கப்படுவதற்காக பாளையத்தில் இருந்த குஷ்டரோகிகள் சீரியர்கள் மடிந்து ஓடிப் போனார்கள், உணவு அனைத்தும் பாளையத்தில் இருக்கிறது என்ற செய்தியை கொண்டு சென்றது போல தங்களை வழிநடத்திக் கொண்டிருந்த பேதுரு சிறைச்சாலையிருந்து விடுவிக்கப்பட்டார் என்ற நற்செய்தியை மகிழ்ச்சியோடு அனைவருக்கும் ரோதை அறிவித்தாள். தேவன் நம் வாழ்வில் செய்யும் நன்மைகளையும், இயேசுகிறிஸ்து நமக்குத் தந்த இரட்சிப்பின் நற்செய்தியையும் நாம் மிகுந்த மகிழ்ச்சியோடும், உற்சாகத்தோடும் பிறருக்கு அறிவிக்க ரோதையின் வாழ்க்கை நமக்கு தூண்டுகோலாக அமையட்டும்.

கிறிஸ்துவில் பிரியமானவர்களே, ரோதை என்ற சிறு பெண்ணுடைய செயல் நமது சாட்சியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கைக்கு ஆதாரமாக இருக்கட்டும். விசுவாசத்திற்கும், நற்செய்திக்கும் எப்படி சாட்சியோடு நின்றாரோ அதுபோல நம் வாழ்விலும் சாட்சியாக வாழ ஆண்டவர் உதவி செய்வாராக.

திருமதி. P. அன்பு வனிதா ஜோசப்
ஆயரம்மா - இராஸ் அல் கைமா.

செயலர் மடல்

மாறாத நித்திய தேவாதி தேவன், தமது அளவற்ற கிருபையினால் கடந்த பத்து மாதங்களாக நம்மைக் கிருபையாக பாதுகாத்து, வழிநடத்தி வந்ததற்காக நன்றியோடு அவரைத் துதிக்கிறேன். இஸ்ரவேலின் தேவன் தம்முடைய ஜனங்களுக்குப் பலத்தையும் சத்துவத்தையும் அருளுகிறவர். அவருடைய அளவற்ற கிருபைக்கும், மாறாத அன்பிற்கும், உண்மையுள்ள வழிநடத்துதலுக்கும் தேவனுக்கே சகல துதியும் மகிமையும் உண்டாவதாக!

ஞாயிறு காலை ஆராதனையைத் தொடர்ந்து நடைபெறும் Junior Church, Cornerstone, Youth Fellowship, Men's Fellowship, Women's Fellowship, Fasting Prayer, Tamil Class, Area Prayer Cell ஜெப ஊழியங்கள் மற்றும் முகாம் சந்திப்பு ஊழியங்கள் ஆகிய அனைத்தும் வெகு சிறப்பாக நடைபெறக் கர்த்தர் தமது அளவற்ற கிருபையைப் பாராட்டினார். இவ்வனைத்து ஊழியங்களின் மூலமாகவும் அநேகர் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்று பயனடையச் செய்த தேவனுக்கே சகல துதியும் மகிமையும் உண்டாவதாக!

HTC ஆலயத்தில் வெள்ளிக்கிழமைகளிலும், Jebel Ali Christ Church ஆலயத்தில் சனிக்கிழமைகளிலும் மாலை 7.00 மணி முதல் 8.30 மணி வரை முறையாக ஆராதனைகள் நடைபெறக் கர்த்தர் தமது கிருபையைப் பாராட்டினார்.

மேலும், Jebel Ali Christ Church ஆலயத்தில் ஒவ்வொரு மாதமும் மூன்றாவது சனிக்கிழமை மாலை 7.00 மணி முதல் 8.30 மணி வரை நடைபெறும் Sing Song ஆராதனையில் கலந்து கொண்டு, விசேஷித்த பாடல்களைப் பாடி தேவனை மகிமைப்படுத்திய ஒவ்வொருவருக்காகவும் கர்த்தருக்கு நன்றி செலுத்தி, அவரை ஸ்தோத்திரிக்கிறேன்.

நமது கிளைச் சபைகளான Fujairah மற்றும் Ras Al Khaimah சபைகளில் நடைபெற்று வரும் ஆராதனைகள் மற்றும் அனைத்து ஊழியங்களுக்காகவும் தேவாதி தேவனுக்கு கனத்தையும் மகிமையையும் செலுத்துகிறேன். கிளைச் சபைகளின் வளர்ச்சிக்காக மிகுந்த கரிசனையுடன் ஊழியம் செய்து வரும் அருமையான போதகர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்காகவும், சபை ஊழியங்களில் அர்ப்பணிப்புடன் பணியாற்றி வரும் சபை அங்கத்தினர்கள் ஒவ்வொருவருக்காகவும் மனமார்ந்த நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவிக்கிறேன்.

நமது சபையின் வருடாந்திர ஸ்தோத்திரப் பண்டிகையை முன்னிட்டு, ஒவ்வொரு வாரமும் சிறப்பாக நடைபெற்று கொண்டிருக்கிற Weekly Sales நிகழ்வை, ஒவ்வொரு Ministries சார்பாகவும் முறையாகவும் சிறப்பாகவும் நடத்துவதற்கு ஒத்துழைப்பு அளித்து, உற்சாகத்துடன் உதவிகள் செய்த ஒவ்வொருவருக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பணியில் தன்னார்வத்துடன் பங்களித்து, ஒற்றுமையோடும் அர்ப்பணிப்போடும் சேவை செய்த அனைவரையும் கர்த்தர் தொடர்ந்து ஆசீர்வதிப்பாராக!

11.10.2026, ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆராதனை, Junior Church பிள்ளைகளின் சிறப்பு ஆராதனையாகச் சிறப்பாக நடைபெற்றது. இந்த ஆராதனையில் கலந்து கொண்டு சிறப்புப் பாடல்களைப் பாடி, தேவனுக்கு மகிமை சேர்த்த அனைத்து JC பிள்ளைகளுக்கும் ஆராதனையைச் சிறப்பாக நடத்துவதற்கு உறுதுணையாக இருந்த ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் அன்பான நன்றிகள். சிறப்புப் பாடல் பாடி ஆராதனையை மேலும் சிறப்பித்த ஜுனியர் சர்ச் ஆசிரியர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நாளில் JC Retreat "Arise and Shine " என்னும் சிறப்பான தலைப்பு மூலமாக நடைபெற்றது. அதிலும் ஒத்துழைப்பு தந்த, பங்குபெற்ற, பயனடைந்த ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதில் சிறப்பு உரையாற்றிய Mrs. Sneha Joshua அவர்களுக்கும் நன்றி கூறுகிறேன்.

11.10.2026 அன்று நடைபெற்ற Women's Fellowship Memory Verse Contest-ல் கலந்து கொண்டு ஆர்வத்துடன் பங்கேற்று, தேவனுடைய வார்த்தைகளை மனதில் பதித்த ஒவ்வொருவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது கிளை சபையான Fujairah திருச்சபையின் 38 வது சபை தின விழா (Church Day), 16.10.2026 அன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் பங்கேற்ற அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், சிறப்புப் பாடல்களைப் பாடி நிகழ்ச்சியைச் சிறப்பித்த நமது CSI Tamil Parish Dubai மற்றும் Fujairah திருச்சபையின் பாடகர் குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

18.10.2026, ஞாயிற்றுக்கிழமை ஆராதனையில், கன்வென்ஷன் சிறப்புப் பேச்சாளர் Brother. Samson Paul அவர்கள் கலந்து கொண்டு, தேவனுடைய வார்த்தையை வழங்கினார்கள். அதே நாள் Glendale School-இன் Primary Pod

Hall-இல் நடைபெற்ற Young Minds Retreat நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்ட ஒவ்வொருவருக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அக்டோபர் 19, 20 மற்றும் 21 ஆகிய மூன்று நாட்களிலும் கன்வென்ஷன் கூட்டங்கள் சிறப்பாக நடைபெற தேவன் கிருபை செய்தார். மேலும், அக்டோபர் 22-ஆம் தேதி நடைபெற்ற Ministry leaders கூடுகை, 24-ஆம் தேதி நடைபெற்ற Church Retreat சிறப்பாக நடைபெற தேவன் கிருபை செய்தார். இந்த ஒவ்வொரு நிகழ்வுகளிலும் Bro.Samson Paul அவர்களை தமது கரத்தில் சிறப்பாக எடுத்து பயன்படுத்தி, நமது திருச்சபையிலுள்ள அநேகருக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதம் கிடைக்கும் வகையில் வல்லமையான தேவசெய்திகளை வழங்க, தேவன் கிருபை செய்தார். Bro.Samson Paul அவர்களுக்கும் CSI Tamil Parish Dubai சார்பாக மனமார்ந்த நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். அவரைத் தமது ஊழியத்தில் தேவன் தொடர்ந்து வல்லமையாகப் பயன்படுத்தி, அநேகருக்கு ஆசீர்வாதமாக இருக்க கிருபை செய்வாராக.

அனைத்து கன்வென்ஷன் கூடுகைகளிலும் கலந்து கொண்டு சிறப்பு பாடல்கள் பாடி, இசை மீட்டி, தங்கள் திறமைகள் மூலம் தேவனை மகிமைப்படுத்திய ஒவ்வொரு சிறுவர், சிறுமியருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், பிள்ளைகளுக்குப் பொறுப்புடன் பயிற்சியளித்து, அவர்களைச் சிறப்பாக வழிநடத்தி, இந்த நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற உதவிய Mrs. & Mr. Deva Thilak Pandian மற்றும் Mr. Shajin அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், 23.10.2026 Fujairah ஆலயத்தில் கன்வென்ஷன் கூட்டங்கள் சிறப்பாக நடைபெறவும், அதனைத் தொடர்ந்து, 24.10.2026 Ras Al Khaimah ஆலயத்திலும் கன்வென்ஷன் கூட்டங்கள் சிறப்பாக நடைபெறவும் தேவன் கிருபை செய்தார். தேவசெய்தியை வழங்கிய Bro.Samson Paul அவர்களை தேவன் தமது ஊழியத்தில் சிறப்பாகப் பயன்படுத்தியதற்காகவும் நன்றி கூறுகிறேன்.

25.10.2026 அன்று நடைபெற்ற ஞாயிறு ஆராதனை, Youth Fellowship ஞாயிறு ஆராதனையாக சிறப்பாக நடைபெற தேவன் கிருபை செய்தார். இதில் கலந்து கொண்டு ஆராதனையைச் சிறப்பித்த ஒவ்வொரு இளைஞருக்கும் எங்களுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அன்று மார்பக புற்றுநோயைப் பற்றி சிறப்பு பரிவுரை வழங்கிய Dr. Riamol Isaac அவர்களுக்கு சபையின் சார்பாக நன்றியையும் வாழ்த்துதலையும் கூறிக்கொள்கிறேன்.

நாம் திருச்சபையாக ஜெபத்தோடும், உற்சாகத்தோடும், தாராள மனதோடும் கொடுத்து உதவுவதன் மூலம், ஆதரிக்கப்பட்டு வரும் 110 மிஷனரிமார்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கும், Kolahur மிஷினரி மருத்துவர்கள் குடும்பத்திற்காகவும், பல்வேறு சரீரக் குறைபாடுகள் உள்ள சிறுவர்களுக்கும், மேலும் 16 பல்வேறு ஸ்தாபனங்கள் பொருளாதார உதவிகளை வழங்க கர்த்தர் கிருபை செய்துவருவதற்காக அவருக்கு நன்றி செலுத்தி, மகிமைப்படுத்துகிறேன். இந்த ஊழியங்கள் தொடர்ந்து சிறப்பாக நடைபெறவும், இதன் மூலம் உதவி பெறுவோர் ஆசீர்வாதம் அடையவும் நாம் தொடர்ந்து ஜெபிப்போம்.

சபைக்கான CDA அனுமதி, சபைப் பதிவு மற்றும் சபையின் பெயரில் வங்கிக் கணக்கு திறப்பதற்கான அனுமதி ஆகியவை கிடைக்கவும், இவை தொடர்பான அனைத்து காரியங்களும் தடையின்றி நிறைவேறவும், இவற்றைக் குறித்துப் பாரத்தோடு தொடர்ந்து ஜெபிப்போம். நம்மைச் சுற்றியுள்ள நாடுகளின் சூழ்நிலைகள் சீரடையவும், பொருளாதார நிலை மேம்படவும், சமாதானமும் பாதுகாப்பும் நிலவவும் நாம் அனைவரும் ஒன்றிணைந்து ஜெபிப்போம்.

நமது கிளை சபையான Ras Al Khaimah திருச்சபையின் Harvest Festival-2026 சிறப்பாக நடைபெற கடவுள் கிருபை செய்தார். அதற்காக நான் கடவுளை ஸ்தோத்திரிக்கிறேன். அதில் கலந்துகொண்டு சிறப்பித்த அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்.

நமது கிளை சபையான Fujairah திருச்சபையின் Harvest Festival 2026 வருகிற 15th November 2026-ம் தேதி நடைபெற முடிவு செய்யப்பட்டுள்ளது. சபை மக்கள் அனைவரும் அதில் கலந்து கொண்டு சிறப்பிக்க அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நமது துபாய் திருச்சபையின் Harvest Festival 2026 - Al Mabarkia Hall, Grand Halls, Ajman-ல் வைத்து 22nd November 2026-ம் தேதி நடைபெற முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வருடாந்தர Harvest Festival சிறப்பாக நடத்த சபை மக்கள் அனைவரும் நல்ல ஒத்துழைப்பு தரவும், அதற்கென்று ஊக்கமாக ஜெபிக்கவும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பிக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

கிறிஸ்துவின் பணியில்,
P. பிரகாஷ், செயலர்.

CHURCH OF SOUTH INDIA
TAMIL PARISH DUBAI

THAT THEY ALL MAY BE ONE
CHURCH OF SOUTH INDIA



CSI TAMIL PARISH DUBAI

Cordially invites you to celebrate

HARVEST FESTIVAL



SUNDAY
22nd November 2026

FROM
7:00 AM onwards

Venue: Al Mabarkia Hall, Grand Halls, Ajman
Sheikh Rashid Bin Humeed St · Al Rashidiya 3 · Ajman

SCAN FOR LOCATION



Come together in thanksgiving as we celebrate God's abundant blessings and the fruits of our labour.

You are warmly invited to our Harvest Festival of praise and thanksgiving.

நீங்கள் கிறிஸ்தவரா...

"குமாரனைக் கண்டு, அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்தியஜீவனை அடைவதும், நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவதும், என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது என்றார்." யோவான் 6:40

அனைத்துலகும்
ஆதியிலே
ஆண்டவரால்
உண்டாக்கப்பட்டு
உன்னதரிடமே
இருக்கும்."இருக்கிறது"
பிரபஞ்சத்துக்கு...
ஆதாரமாய்,
தூய்மையானவராய்,
நித்தியமானவராய்,
நிர்மல தேவனாய்,
பரமாத்மாவாய்,
எப்போதும் மாறாத
இயல்புடையவராய்
சகலமும் தம்முள்
கொண்டவராய்
எல்லாவற்றுக்குள்ளும்
எல்லாமானவராய்,
அஞ்ஞானம், துக்கம்
இல்லாதவராய்,
உண்மையான
உன்னத ஞானத்துக்கு
உரியவராய்
தன்னை விட
உயர்ந்தோர் எவரும்
இல்லாதவராய்...
சர்வ லோக வியாபியாகி
திரியேகர்....
ஒரே கர்த்தராகி
பரிணமிக்கும்...
கடவுள்...
கருணைக்கடல்
கர்த்தர்.

அன்பானோரே!
தேவக்குமாரன்
இயேசு கிறிஸ்துவை
உள்ளத்தின் உள்ளே
உறுதியாய்
விசுவாசிக்கும்
பரம பக்தனும்
நித்திய ஜீவனை
அடைய விரும்புபவனும்
அக நோக்கு
உடையவனாய்
இயேசு கிறிஸ்துவை
தியானிக்கிறான்.
அவ்வண்ணமே
நித்திய ஜீவன்
அடைவதும்
கடைசிநாளில்
அவனை எழுப்புவதும்
வாக்கு மாறாத - நம்
இயேசு பிதாவின்
வரமே...
இந்த ஆசீர்வாத
அருளாசியை
அடைவது -- நம்
ஒவ்வொருவரின்
பிறவிபயன்
மதி மயங்காது
மன்னவரை துதி
நற்கதி வருமே!
அன்பானோரே!
மழலை தனை
மகிழ்விக்க
மரப்பாவைகளை...

மனம் போல
விளையாடும்போது
பெற்ற தாயை
நினைப்பதில்லை.
ஆனால்...
அம்மா...
அவ்விடம்வர...
அந்த குழந்தை
அனைத்தையும்
அப்பால் போட்டுவிட்டு
அம்மா..அம்மா என்று
அழைத்தபடியே
அம்மாவிடம்
அமர ஆவல்படுவதுமே
உங்களுக்குள்ளே
உறுதியாய் இருக்கும்
உன்னதர் இயேசுவை
காண்பீர்களானால்
செல்வம்,
கௌரவம்,
புகழ்
இவைகளிலே
இச்சை இருக்காதே!
நிலை தடுமாறாதே!
இயேசுவை
விசுவாசிப்போம்!
நித்திய வாழ்வினை
பெற்றிடுவோம்!
கடைசி நாளில்
உயிர்த்தெழுந்து,
கர்த்தரோடு
என்றும்
வாழ்ந்திடுவோம்!!!

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

திருச்சபை ஜெபநாள் 01-11-2026 (முதல் ஞாயிறு)

"அல்லாமலும், உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்." மத்தேயு 18:19

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும் சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும் மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

துதிகள்

- கடந்த மாதம் முழுவதும் கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலன், ஜீவனுக்காக, திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- நம் பணிகள், தொழில்கள் மற்றும் பிரயாணங்களில் ஆண்டவர் அருளிய பாதுகாப்பிற்காக துதிப்போம்.
- அக்டோபர் மாதம் அனைத்து ஆராதனைகளும் ஆசீர்வாதமாக நடந்தமைக்காக துதிப்போம்.
- யுத்தங்கள், ஆபத்துக்களுக்கு நடுவில் ஆண்டவர் தரும் பாதுகாப்பிற்காக துதிப்போம்.

திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், அலுவலக பணியாளர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக ஜெபிப்போம்.
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், மற்றும் அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும் ஜெபிப்போம்
- ∴புஜைரா, இராஸ் அல் கைமா சபைகளின் ஊழியங்களுக்காக, சபை வளர்ச்சிக்காக ஜெபிப்போம்.
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
- திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,

- சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன் பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,
- நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஆன்மீக வளர்ச்சிக்காக, மிஷனெரி ஊழியங்களுக்காக, தாங்கும் திருச்சபை மக்களுக்காக, மற்றும் மிஷனெரி ஸ்தாபனங்களுக்காக,
- தென்னிந்தியத் திருச்சபைக்காக, அனைத்துப் பேராயங்கள், நமது பேராயர்கள், குருவானவர்கள், திருப்பணியாளர் அனைவருக்காகவும், திருப்பணிகளுக்காக,
- கொளகூர் மாதிரி கிராமத்தில் அமைத்துள்ள மருத்துவமனையின் மருத்துவர்களுக்காக, அவர்கள் ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.
- Harvest Festival ஆயத்தங்களுக்காக ஜெபிப்போம்.

இந்திய நாட்டுக்காக ஜெப வேண்டுதல்கள்

- இந்திய நாட்டுக்காக, நாட்டின் ஆட்சியாளர்கள், நாட்டின் பொருளாதார வளர்ச்சி, வேளாண்மை (விவசாயி) களுக்காக, அனைத்து சமயத்தாரும் ஒற்றுமையாக இருக்க, வறட்சி நீங்க, இயற்கை வளங்கள் பாதுகாப்புக்காக, மழைநீரை பாதுகாத்து பயன்படுத்த ஜெபிப்போம்.
- இந்திய அரசு பாரபட்சமில்லாமல், நடுநிலையோடு ஆட்சி செய்ய
- வேற்றுமைகள் ஒழிந்து சமத்துவம் வளர, மத தீவிரவாத அமைப்புகளின் மனமாற்றத்திற்காக
- தேசம் முழுவதும் எல்லை பாதுகாப்புக்காக, தீவிரவாதிகளின் அச்சுறுத்தலிலிருந்து விடுதலை பெற
- தேசத்தில் நடைபெறும் அனைத்து மிஷனெரி ஊழியங்களுக்காக

ஐக்கிய அரபு நாடுகள் (UAE) தேசங்களுக்காக ஜெப வேண்டுதல்கள்

- அரசர் குடும்பங்களுக்காக, தேசத்தின் பாதுகாப்புக்காக, இராணுவத்தினருக்காக
- நல்ல வேலை வாய்ப்புக்காக, வேலை தேடி வருபவர்களுக்கு நல்ல வேலைகள் கிடைக்க, யுத்தத்தினால் வேலைவாய்ப்பு பாதிக்கப்பட்டவர்கள் மீண்டும் வேலை பெற்றிட
